**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்**

**O.S. 208/2007**

**வா.சா.1 - சுடலையாண்டி பிள்ளை**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 15.10.2025.**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

மனு எண். 8/2025, 9/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி. கீழ்க்கண்ட ஆவணங்களை வா.சா.1 தரப்பில் கூடுதல் சான்றாவணமாக குறியீடு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.10 | -- | வாதி பெயரிலான பாட்ட ரசீதுகள் எண்ணம் - 17 (எதிர்தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) | அசல் |

**முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை**

வா.சா.ஆ.10 ரசீதுகள் யார் எனக்கு கொடுத்தார்கள் என்றால் சுடலைமாட சுவாமி கோவில் வழிபாட்டுக்குழு பரம்பரை டிரெஸ்டு பொருளாளர் நல்லபெருமாள் பிள்ளை கொடுத்தார். மேற்படி நல்லபெருமாள் பிள்ளையை நீதிமன்றத்தில் வாதி தரப்பு சாட்சி வா.சா.2 ஆக விசாரித்தோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ரசீதுகள் எனது கைக்கு வந்து எத்தனை நாட்கள் ஆனது என்றால் ஆறுமாதத்திற்கு ஒருமுறை ரசீது கொடுப்பார்கள். ஆறுமாதத்திற்கு முன்பே மேற்படி வா.சா.ஆ.10 ரசீதுகள் அனைத்தும் எனது கைவசம் இருந்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ரசீது எண்ணம் 1 ன் தேதி 13.04.2017 என்றால் சரிதான். நீதிமன்றத்தில் 28.03.2017 அன்று நான் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். 05.06.2025 அன்றும் நீதிமன்றத்தில் ஆஜராகி ஆவணங்கள் தாக்கல் செய்து சாட்சியம்

அளித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சாட்சியம் அளித்த சமயங்களில் மேற்படி வா.சா.ஆ.10 எனது கையில் இருந்ததா என்றால் அந்த சமயத்தில் வீடு மாறினோம் நான் தேடிபார்த்தேன் கிடைக்காததால் தற்போது தாக்கல் செய்கிறேன்.

வா.சா.ஆ.10 ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டி மனு தாக்கல் செய்தேன் மேற்படி மனுவின் வீடு மாறும் சங்கதிகளை கூறவில்லை என்றால் சரியல்ல. வா.சா.2 சாட்சியிடம் மேற்படி வா.சா.ஆ.10 ரசீதுகளின் அடிகட்டுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து சாட்சியளித்தாரா என்று நான் கேட்டேனா என்றால் கேட்கவில்லை. வா.சா.ஆ.10 ஆவணங்களை வா.சா.2 என்னிடம் கொடுத்திருந்தால் அதன் அடிக்கட்டுகள் அவரிடம் இருந்திருக்கும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பார் என்றால் சரியல்ல. ஆற்றங்கைரை சுடலைமாட சுவாமிகோவிலுக்கும் மேற்படி பொருளாளரான வா.சா.2 க்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி ஆற்றங்கைரை சுடலைமாட சுவாமிகோவில் குலசேகரபுரம் வெள்ளாளர் சமுதாய நங்கையம்மன் டிரெஸ்டுக்கு பாத்தியப்பட்ட கோவில் மற்றும் மேற்படி பொருளாளருக்கும் மேற்படி கோவிலுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்திற்கு உரிமையாளரிடம் நான் எவ்வித பாட்டமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஆகையால் வழக்கில் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.10 ஆவணங்கள் என்னால் தற்சமயம் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ரசீதுகள் செல்லத்தக்கதல்ல அதன் அடிப்படையில் வழக்கு பட்டிகை சொத்தின் மீது பாட்ட உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>